**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண். 97 / 2009**

**தேதி. 13.10.2023**

**பெயர். ரமேஷ்**

**த/பெ. அக்கய்யா**

**வயது. 51** **ஊர்.வீரராகவபுரம்**

வா.த.சா 1

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனது சொந்த ஊர் வீரராகவபுரம் தான். கொடமேக்கலு குப்பய்யா என்பவர் எனது தாத்தாவின் அப்பா ஆவார். இவ்வழக்கு தாவா சொத்து மேலே குறிப்பிட்டுள்ள கொடமேக்கலு குப்பய்யா என்பவருக்கு சொந்தமானது ஆகும். அவருக்கு இரண்டு மகன்கள் அவர்கள் முனுசாமி மற்றும் வெங்கடய்யா ஆவார்கள். முனுசாமி என்பவருக்கு இரண்டு மனைவிகள் அவர்களது பெயர் எனக்கு தெரியாது. சாளாம்மாள் என்பவர் முனுசாமி என்பவரது முதல் மனைவி என்றால் சரியல்ல முனுசாமி என்பவரது முதல் மனைவி இறந்துவிட்டார் அவரது பெயர் எனக்கு தெரியாது, முனுசாமியின் இரண்டாவது மனைவியின் பெயர் தான் சாளாம்மாள் ஆவார்.

2. முனுசாமி மற்றும் அவரது முதல் மனைவின் மகள் தான் தனலட்சுமி என்றால் சரிதான் அவர் இறந்துவிட்டார். கொடமேக்கலு குப்பய்யா அவருக்கு சொந்தமான சொத்து குறித்து எந்தவிதமான செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். முனுசாமி மற்றும் வெங்கடேசன் ஆகியோர்களும் தாவா சொத்து குறித்து எந்தவிதமான ஆவணங்களும் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான். தனலட்சுமி என்பவர் எப்போது இறந்தார் என்றால் தேதி, மாதம், வருடம், ஞாபகம் இல்லை சுமார் 44 வருடங்கள் இருக்கும். தனலட்சுமிக்கு வாரிசுகள் உள்ளார்கள். தனலட்சுமியின் மகள் கஸ்தூரி, அவர் இறந்துவிட்டார் தனலட்சுமியின் மகன் ரகுபதி ஆகும். கஸ்தூரி என்பவருக்கு 2 குழந்தைகள் உள்ளது அவர்களது பெயர் எனக்கு தெரியாது. கஸ்தூரியின் கணவர் இறந்துவிட்டார்.

3. சாளாம்மாள் என்பவர் எனது பாட்டி ஆகும். சாளாம்மாள் என்பவருக்கு தாவா சொத்தின் மீது முழு உரிமை இல்லாத காரணத்தினால் 12.10.2006ம் தேதியில் எனது பெயரில் தாவா சொத்து குறித்து எழுதி வைக்கபட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கது அல்ல  என்றால் சரியல்ல சாளாம்மாள் எனது தாத்தா முனுசாமியின் மனைவி என்ற காரணத்தினால் செல்லும். தாவா சொத்து கொடமேக்கலு குப்பய்யா என்பவருக்கு பாத்தியப்பட்டபடியால் அவரது வாரிசுகள் அனைவருக்கும் தாவா சொத்தில் உரிமையுள்ளபடியால் சாளாம்மாள் தாவா சொத்து குறித்து எனது பெயரில் செய்து வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் வா.த.சா.1 செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல 1972ம் வருடம் சொத்துகள் பாக பிரிவினை செய்யப்பட்டுள்ளது அதன் அடிப்படையில் தனலட்சுமி என்பவருக்கு பாகம் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆகையால் எனது பாட்டி சாளாம்மாள் எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லும்.

4. எனது சாட்சியத்தில் கூறியுள்ள பாக பிரிவினை சங்கதிகளை வா.த.சா.1 ஆவணத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எனது வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் பாக பிரிவினை சங்கதிகளை குறிப்பிட்டுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அவ்வாறு சங்கதிகள் எதுவும் குறிப்பிடபடவில்லை. வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல உண்மை தான்.

வழக்கறிஞர் வேண்டுகோள்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கபடுகிறது.